நாள்- 23.02.2023
Case No. OS.102/2017

PW.1- ரவி – பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியும். நடராஜசெட்டியார் என் அப்பா என்றால் சரிதான். என் அப்பாவிற்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் 3 ஆண்பிள்ளைகள் மற்றும் 3 பெண் பிள்ளைகள் ஆகும். பிரதிவாதி விஜயகுமார் என் அண்ணன் என்றால் சரிதான். எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அண்ணன் என்னுடைய இடத்தில் இருக்கிறார் அவரை இடத்தை விட்டு காலிசெய்து கொடுக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என் அண்ணன் எனக்கு எதிராக ஆற்காடு நீதிமன்றத்தில் ஒரு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த அசல் வழக்கு எண். 73/2016 என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி வழக்கு தற்போது இந்த நீதிமன்றத்திற்கு மாறுதலாகி வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி இருக்கும் வீட்டை என் அப்பாதான் கட்டினார் என்றால் சரிதான். மேற்படி வீட்டை என் அப்பா கட்டி சுமார் எவ்வளவு ஆண்டு இருக்கும் என்றால் சுமார் 20 ஆண்டுகாலம் இருக்கும். சுமார் 20 ஆண்டுகாலமாக என் அண்ணன் பிரதிவாதி விஜயகுமார்தான் அந்த வீட்டில் இருந்து வருகிறார் என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)